ஆகியோருக்கு இப்போது பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. சுப்புசேஷ ஐயர் அனுபவித்து வந்ததை விற்றுவிட்டுப் போய்விட்டார். ஆகவே, அதில் நடவடிக்கை இப்போது தேவை இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் அவற்றை உழுதுகொண்டிருக்கிறவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்கள். இந்தத் தியாகிகளின் வாரிசுகள் யாராவது இதற்கு ஆட்சேபணை தெரிவித்தார்களா ? அப்படி ஏதாவது ஆட்சேபணை தெரிவித்திருந்தால் அவற்றின் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : யாரும் அவைபற்றி மனுக்கள் செய்யவில்லை. ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை.

திருக்கடையூர்-தரங்கம்பாடி இணைப்புச்சாலை

* **536 வினு—திரு. டி. வி. சம்பத்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கடையூரிலிருந்து வேப்பஞ்சேரி, தாழம்பேட்டை, மாணிக்கப் பங்கு வழியாக தரங்கம்பாடிக்கு இணைப்புச்சாலை ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : இந்த சாலை விஷயம் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. எனவே நடப்பாண்டிலாவது சிறப்பு நிதி உதவி செய்து இந்த இணைப்புச் சாலையை திட்டத்தில் சேர்த்து அந்தப் பகுதியில் சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுதும் உண்மை. அது மக்களுக்குப் பயன்படும் சாலைதான். நான்கு மதகுகளும் ஒரு சிறிய பாலமும் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு ரூ. 13 லட்சத்திற்கு மேல் செலவாகும் நிலை இருப்பதால் அந்த வேலையை இந்த ஆண்டில் செய்து முடிக்கமுடியாது.